**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 106 of 2019

Depositions of DW - 3 witness for ________ Prosecution / Defence / Court

Name : சின்னசாமி

Father's Name : த/பெ. கந்தப்பன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of July 2023.

முதல் விசாரணை –

1. சுதாவுக்கும் எனக்கும் இடையே வரவு செலவு இருந்து வந்தது. அவ்வாறு சுதா என்னிடம் பணம் கடனாக பெற்ற போது ராஜேஷ்குமாரின் தம்பியான விஜய்குமாரின் நில பத்திரத்தினை என்னிடம் அடமானம் வைத்தார். நான் 2 வருடங்கள் கழித்து மேற்படி தொகையை சுதாவிடம் திருப்பி கேட்டதற்கு சுதா கூறியதன் பெயரில் மேற்படி விஜய்குமார் அந்த சொத்தை குறித்து என் பெயரிலும் மேலும் வி. சின்னசாமி பெயரிலும் அடமானம் எழுதி கொடுத்தார். விஜயகுமாரினுடைய நிலத்திற்கான அசல் பத்திரம் மட்டும் என்னிடம் உள்ளது. எனக்கு கொடுக்க வேண்டிய அடமான தொகை ரூ.7,35,000/- ஆகும். மொத்த தொகையாக ரூ,14,65,000/- பத்திரம் எழுதினோம்.

2. ராஜேஷ்குமார் வாங்கிய பணத்திற்கு அவருடைய தம்பி விஜய்குமாரிடம் சொல்லி அவர் சொத்தை எங்களுடைய பெயரில் அடமானம் எழுதி கொடுத்தார். சுதாவிற்கும் ராஜேகுமாருக்கும் இடையே என்ன வரவு செலவு என்று எனக்கு தெரியாது.

பத்திரம் எழுதிய போது தான் நான் ராஜேஷ்குமாரை பார்த்தேன். ராஜேஷ்குமார் சுதாவிடம் வைத்திருந்த வரவு செலவு மற்றும் எழுதி கொடுத்த பணம் எனக்கு தெரியாது.

3. மனுதாரர் என்னுடைய ஊரை சேர்ந்தவர் என்பதால் அவரை பார்த்துள்ளேன். ஆனால் அவருக்கும் எனக்கும் இடையே வரவு செலவோ பேச்சு வார்த்தையோ எதுவும் கிடையாது. மனுதாருக்கும் சுதாவிற்கும் இடையேயான வரவு செலவு குறித்த விபரங்கள் எனக்கு தெரியாது. சுதா கொடுக்க வேண்டிய பணத்திற்காக ஊர்காரர்கள் சுதா வீட்டில் இருந்த ஆவணங்களை எடுத்து சென்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் கேள்விபட்டேன் நான் நேராக பார்க்கவில்லை.

4. சுதா எனக்கு எதிராக வேறொரு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வேறு எதுவும் எனக்கு தெரியாது.

<u>குறுக்குவிசாரணை</u>

எதிர் மனுதாரரின் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே குறுக்குவிசாரணை முடிக்கப்படுகிறது.

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2023.07.25 16:16:17 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**